சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்)
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**ஆணை நாள் 06.07.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இ.கா.ப. (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

•••••

**வழக்கு எண். SA 13644/E/2024**

திரு.M.மனோகரன் -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம், பொது அதிகார அமைப்பு
வேளச்சேரி வட்டம், சென்னை மாவட்டம்.

******

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (06.07.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மேல்முறையீட்டாளர் | திரு.M.மனோகரன் அவர்கள் இன்றைய விசாரணையில் ஆஜராகவில்லை. |
| தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012 விதி 7(2)-ன்படி மேல்முறையீட்டாளர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. | |
| பொது அதிகார அமைப்பின் சார்பாக | திரு./திருமதி.எஸ்.டார்வின் டேஜி, சார் ஆய்வாளர், வேளச்சேரி வட்டம், சென்னை அவர்கள் ஆஜரானார். |
| சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் மனு நாள் | 17.08.2024 |
| **கோரிய தகவல்**, வேளச்சேரி தாலுக்கா, ஊரூர் நகரம், பிளாக் 26, சர்வே எண்.19/0 யருக்கு சொந்தமானது, மேற்படி சர்வே எண்.19/0 Permanent Land Register (PLR)-ன் சான்றிட்ட நகல் உள்ளிட்ட 11 இனங்களில் தகவல்களை வழங்கக் கோரி, பொதுத் தகவல் அலுவலர், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வேளச்சேரி வட்டம், | |

| | |
|---|---|
| சென்னை அவர்களுக்கு மனு செய்துள்ளார். | |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் கடிதம் | --- |
| சட்டப் பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனு நாள் | 18.09.2024 |
| மேல்முறையீட்டு அலுவலர் பதில் கடிதம் | --- |
| சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் | 19.10.2024 |

•••••

- பொதுத் தகவல் அலுவலர், இவ்வழக்கில் மனுதாரர் கோரிய தகவல் தங்கள் அலுவலக கடித ந.க.எண்.அ1/1252/2020, நாள் 01.07.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதாக எடுத்துரைக்கிறார்.
- பொதுத் தகவல் அலுவலரின் வாதத்தின் மீதான எதிர் வாதத்தினை எடுத்துரைக்க மனுதாரர் இன்றைய விசாரணையில் ஆஜராகவில்லை.

2. பொதுத் தகவல் அலுவலர்களின் வாதம் மற்றும் ஆவணங்களை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது:-

a) இவ்வழக்கில் மனுதாரர் சட்டப் பிரிவு 6(1)-ன்கீழ் கோரிய தகவல்களுக்கு, பொதுத் தகவல் அலுவலரின் 01.07.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக முதன் முதலாக மனுதாரருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

b) தகவல்களை பொருத்தவரையில் 01.07.2026 தேதியிட்டு வழங்கப்பட்ட தகவல் உரிய தகவல் என ஆணையம் பதிவு செய்கிறது.

3. <u>மேலும் முதல் மேல்முறையீட்டு அலுவலர்/ வட்டாட்சியர், வேளச்சேரி அவர்களுக்கு கீழ்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது</u>:-:-

i. மனுதாரரின் 17.08.2024 தேதியிட்ட சட்டப் பிரிவு 6(1) மனுவினை பெற்றுக்கொண்டு, <u>மனு பெறப்பட்ட 30 தினங்களுக்குள் தகவல் வழங்கத் தவறிய அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் யார் என கண்டறிந்து அவர் மீதும் சட்டப் பிரிவு 20(1)-ன்கீழ் பணத்தண்டமும், 20(2)-ன்கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் ஏன் பரிந்துரைக்கக் கூடாது என்பதற்கான எழுத்துப்பூர்வமான விளக்கத்தினையும்,</u>

ii. மேலும், மனுதாரரின் 18.09.2024 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவினை பெற்றுக்கொண்டு, மனுதாரருக்கு தகவல் வழங்காத அப்போதைய முதல் மேல்முறையீட்டு அலுவலர் யார் என கண்டறிந்து, அவர் மீது சட்டப் பிரிவு 20(2)-ன்கீழ் நடவடிக்கை மேற்கொள்ள ஏன் பரிந்துரைக்கக் கூடாது என்பதற்கான அவரது எழுத்து மூலமான விளக்கத்தினை பெற்று, அதனை ஓர் அறிக்கையாக தயார் செய்து

அவ்வறிக்கையினையும், **இவ்வாணையத்தில் 04.08.2026 அன்று நேரில் சமர்ப்பிக்க உத்தரவிடப்படுகிறது.**

c) மேற்படி உத்தரவினை முழுமையாக நிறைவேற்றி அதுகுறித்த அறிக்கையினை குறிப்பிட்ட தேதியில் இவ்வாணையத்தில் சமர்ப்பிக்க தவறும் பட்சத்தில், விளக்கம் அளிக்க ஏதும் இல்லை என ஆணையத்தால் கருதப்பட்டு சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என எச்சரிக்கப்படுகிறது.

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 13644/E/2024</u>**
**<u>பெறுநர்</u>**

முதல் மேல்முறையீட்டு அலுவலர்/
வட்டாட்சியர்,
வேளச்சேரி வட்டம், சென்னை மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
வேளச்சேரி வட்டம், சென்னை மாவட்டம்.

**<u>மேல்முறையீட்டாளர்</u>**
திரு.M.மனோகரன் (Advocate), த/பெ.முனியன்,
1வது தளம், திருக்கோவிலூர் மெயின் ரோடு,
கண்டாச்சிபுரம் அஞ்சல் (ம) வட்டம்,
விழுப்புரம் மாவட்டம் - 605 701.

Copy to: File MP/PA-